செ.வெ.எண்: 400/2026 நாள்:14.06.2026

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் கருமந்துறை மலைவாழ் கிராமங்களான தலக்கரை மற்றும் பாச்சாடு கிராமங்களுக்கு புறநகர் பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவையினை தொடங்கி வைத்தார்கள்.**

---

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், தலக்கரை பகுதியில் இன்று (14.06.2026) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் கருமந்துறை மலைவாழ் கிராமங்களான தலக்கரை மற்றும் பாச்சாடு கிராமங்களுக்கு புறநகர் பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவையினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பள்ளி மாணவ, மாணவியர்களுடன் இணைந்து தொடங்கி வைத்தார்கள். பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக ஏழை, எளிய மக்கள் மற்றும் பாமர மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் பொற்கால ஆட்சியை நடத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொதுமக்கள் நலன் சார்ந்த தொலைநோக்கு சிந்தனையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் எந்த ஒரு கிராமத்திலும் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கக்கூடாது என்ற வகையிலும்,

மேலும், மலைவாழ் மக்கள், பழங்குடியினர், மாணவ, மாணவியர்கள், பெண்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டோரின் அன்றாட வாழ்க்கையை கருத்தில் கொண்டு பல்வேறு கிராமங்களுக்கு பேருந்து வழித்தடம் நீட்டிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சேலம் மாவட்டம், தலக்கரை பகுதியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டத்தின் சார்பில் கருமந்துறை மழைவாழ் கிராமங்களான தலக்கரை, பாச்சாடு பகுதி மலைவாழ் மக்கள், மகளிர் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் வழித்தடம் நீட்டிப்பு செய்யப்பட்ட புறநகர் பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புறநகர் பேருந்து வழித்தட நீட்டிப்பு, ஆத்தூரிலிருந்து தும்பள், கருமந்துறை வழியாக சூலாங்குறிச்சி வரை இயக்கப்படும் நடையினை சூலாங்குறிச்சியிலிருந்து வழித்தடம் நீட்டித்து தலக்கரை, பாச்சாடு கிராமங்களுக்கு காலை 7.35 மணிக்கும், மாலை 5.40 மணிக்கும் பேருந்து வசதி தற்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மழைவாழ் மக்களின்

வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும், கல்வி வளர்ச்சிக்கும், விவசாய பொருட்கள் சந்தைக்கு எளிதில் சென்றடையவும் உருதுணையாக அமைந்துள்ளது.

அதே போன்று, தேனி மாவட்டம், போடி அருகே குரங்கனி மலைப்பகுதிக்கு நீண்ட நாட்களாக பேருந்து வசதி இல்லாமல் இருந்தது. இதனை அப்பகுதியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் சமூக வளைதளம் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் அடிப்படையில், அடுத்த நாளே பேருந்து வசதி ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்களின் அனைத்து தரப்பு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதே இந்த அரசின் முதற்கட்ட நோக்கமாக இருக்கும். மேலும், கருமந்துறை மலைவாழ் கிராமங்களான தலக்கரை மற்றும் பாச்சாடு பகுதி மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளும் விரைவாக நிறைவேற்றப்படும். இவ்வாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் திரு.க.குணசேகரன், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஆர்.தமிழ்மணி, பொது மேலாளர் (சேலம்) திரு.த.மோகன்குமார், பொது மேலாளர் (தொழில்நுட்பம்) திரு.ந.கலைவாணன், துணை மேலாளர் (கூட்டாண்மை வணிகம்) திரு.அருள்முருகன் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem